**தலைப்பு 110 – நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்குச் சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ஏனைய நிறுவனங்களுக்கு முறைப்படியாக ஒப்படைக்கப்பட்ட 12 வாகனங்களின் மொத்த பெறுமதியான ரூபா 34,200,000 கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதி சரி செய்யப்படுதல் வேண்டும். | 02 வாகனங்களின் பெறுமதியை இந்த ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கும் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ள வாகனங்களின் திருத்தங்களை முடிவுறுத்தியதன் பின்னர் பெறுமதியை மதிப்பீடு செய்து |

| | | |
|---|---|---|
| | | கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். 07 வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு முறைப்படியாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது மனைப் பொருட்களையும் அலுவலக உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 18,796,073 செலவு செய்யப்பட்டிருந்ததும் நிதிக்கூற்றுக்களில் (ஏசீஏ -6 படிவங்களில்) கொள்வனவு செய்தலின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டவைகளின் கீழ் ரூபா 8,106,936 பதிவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிதி நிலைமை தொடர்பான கூற்றுக்களில் சொத்துக்களின் மீதி மற்றும் ஒதுக்கங்களின் மீதி ரூபா 10,689,136 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டில் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டதின் மொத்தச் செலவு மூலதனமாக்கப் படுதல் வேண்டும். | ஆண்டின் போது சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 10,345,692 பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், உடன்படிக்கையில் குறிப்பிட்டவாறு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 343,443 குறைத்து வருடாந்த சொத்துக்கள் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சரியான இறுதி மீதி சொத்துக்கள் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. |

### 1.6.2 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 1998 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்து வைக்கப்படாத ரூபா 4,809,450 கட்டுநிதி மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். | 1998 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதியான ரூபா 4,809,450 பெறுமதியை எதிர்காலத்தில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி சொத்துக்களின் கீழ் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடும் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும். | தற்பொழுது பேணப்பட்டு வருகின்ற சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை நாளதுவரையாக்கி எதிர்காலத்தில் பேணுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். எதிர்காலத்தில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். |

### 1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படுகின்ற வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் 06 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(உ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

1.6.8 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பொது நிருவாக சுற்றறிக்கை | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்குத் தெரிவு செய்யப்பட்ட 20 வாகனங்களின் எரிபொருள் நுகர்வானது சுற்றறிக்கை பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த அமைச்சின் அனைத்து வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பானது 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் இடம்பெறுவதற்காக ஒரு குழுவினை நியமித்து தேவையான நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2/2018 ஆம் இலக்க அ.நி சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை அல்லது அதற்கிணங்க மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படாதிருந்த போதிலும், ஒவ்வொரு பதவிக்குரிய உத்தியோகத்தர் களுக்கான நானாவித பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்க்ள அமுல்படுத்தப்படுவதுடன் தற்பொழுது பதவி நிலை மற்றும் பதவி நிலையற்ற உத்தியோகத்தர் களுக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2 செலவு விடயங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 11.65 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 12 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இலங்கை வணிக இணக்கப்பாட்டுச் சபை செயற்பாடற்றுக் காணப்பட்டதனால் நிதிஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ள தனால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை வணிக இணக்கப்பாட்டுச் சபை 2016 ஆம் ஆண்டின் போது நீதித்துறை அமைச்சின் நோக்கெல்லைக்கு உட்பட்டிருந்தது. அதன் முகாமைத்துவச் சபை அங்கத்தவர்களுக்காக இந்த அமைச்சினதும் நிதி அமைச்சினதும் உத்தியோகத்தர்களை உள்ளடக்கப்படுவதனை அமுலுக்கு கொண்டு வருவதற்கான தேவையான திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது சிக்கல்கள் உருவாகியுள்ளது. அதன் காரணமாக வணிக் இணக்கப்பாட்டுச் சபையினை செயற்படுத்துவதும் அவைகளை வழங்குவதும் நடைமுறைச் சாத்தியமாக இடம்பெறாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் மூலம் இணக்க ஆதார சபைகளுக்காக இயந்திரங்களையும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருக்காததனால் அச் செலவு விடயங்களின் கீழ் வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 100,000 நிதி ஏற்பாடு | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப் படுவதனால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் | இச்செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டுத் தேவைப்பாட்டை உறுதியாகக் குறிப்பிடுவதற்கு முடியாததனால் ஆண்டின் போது இச்செலவு செய்யப்படும் எனக் கருதி நிதி ஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின் போது செலவு ஏற்படாமையின் |

| | | |
|---|---|---|
| முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிறைவேற்றுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அடிப்படையில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.2 முற்பணம் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 323,197 மொத் தொகை 7 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக அறவிடப்படாது காணப்பட்டது. | கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். | சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் ஒரு உத்தியோகத்தருக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஒரு உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டிருந்தும் சேவையைப் பொறுப்பேற்றுள்ளார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. மேலும், ஆராய்ந்து பார்த்து கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) சேவையை விட்டுச் சென்ற 4 உத்தியோகத்தர்களின் ரூபா 301,405 கூட்டுமொத்தமான கடன் மீதி 04 ஆண்டுகளிலிருந்து 21 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. | விரைவாக அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். | இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் பதிவழிப்பதற்கு அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் தகவல்கள் போதியதல்ல எனக் காட்டி மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்தல் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2016 நவம்பர் மாதத்தில் நடைபெற்ற இணைக்கப்பாட்டு திகதிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளைத் தீர்த்து வைப்பதற்காக UNDP செயற்திட்டத்திலிருந்து 2017 மார்ச் 22 ஆந் திகதி கிடைத்த 1,316,041 பணம் மற்றும் 2015 இலிருந்து 2017 வரை 03 வகையான வைப்புக்கள் தொடர்பாக கிடைத்த ரூபா 1,996,949 சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைத்த பணம் உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறு இல்லையாயின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 02 மாடிகளைக் கொண்ட புத்தளம் சட்ட உதவி மற்றும் சமூக சீர்திருத்த கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலை 2010 செப்தெம்பர் 15 ஆந் திகதி வெளித்தரப்பினருக்கு ரூபா 5,583,770 ஒப்பந்த பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 மார்ச் 27 ஆந் திகதி வேலை முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், 2019 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரை வேலை முடிவுறுத்தப்படாது நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் முடிவுறுத்துவதற்காக | உடன்படிக்கையின் பிரகாரம் விரைவாக நிகழ்ச்சித் திட்டத்தை முடிவுறுத்துதல் வேண்டும். | ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டத்தின் வேலைகளை ஆரம்பித்தல் நிறுத்தப்பட்டுள்ளதனால் தற்பொழுது வேலைகள் முடிவுறுத்தப் பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கை இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் இச்செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை என |

| | | |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போதும் வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அவ்வாண்டில் நிதிஏற்பாடு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சமூக சீர்திருத்த குற்றவாளிகளை ஆலோசனைக்கு உட்படுத்துதல் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்காக தனியான ஒரு அலுவலகத்தை ஸ்தாபிக்கும் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | அறிவிக்கின்றேன். இரட்டை மாடிக் கட்டிடத்தில் தளமாடியின் வேலை முடிவுறுத்தப்பட்டு அதில் சட்ட உதவி அலுவலகம் செயற்பட்டு வருகின்றது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) அமைச்சின் வாகனங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட 22 வாகனங்கள், 2018 ஆம் ஆண்டின் போதும், வாகனப் பெறுமதியில் உள்ளடக்கப்படாத 03 வாகனங்கள் 2019 ஆம் ஆண்டின் போதும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் அவற்றின் உரிமை முறைப்படியாக ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. | உரிமையை முறைப்படியாக ஒப்படைத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) 05 வாகனங்கள் 8 மாதங்களிலிருந்து 1½ ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றில் 03 வாகனங்களின் பெறுமதியானது அமைச்சின் வாகனங்களின் பெறுமதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளக் கூடிய வாகனங்ளைத் திருத்தம் செய்வதற்கும் பயன்படுத்த முடியாத வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதி அமைச்சரின் கடமைகளுக்காக வழங்கப்பட்ட கெப் வாகனம் 2017 மார்ச் 08 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த துடன் அத்திகதியிலிருந்து ஒரு வணிக நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு 02 ஆண்டுகள் 06 மாதங்கள் 20 நாட்களுக்குப் (930 நாட்கள்) பின்னர் மற்றுமொரு வாகனத்தில் ஏற்றி நீதி அமைச்சின் வளவிற்கு 2019 செப்தெம்பர் 28 ஆந் திகதி கொண்டு வந்து போடப்பட்டிருந்தது. பிரதி அமைச்சரின் பதவிக்காலம் 2018 ஒக்தோபர் 27 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் அக்காலத்தின் போது வாகனங்களைப் பொறுப்பேற்பதற்கு முடியாதிருந்தது. விபத்துக்கள் சம்பந்தமாக 2017 யூன் 07 ஆந் திகதி நியமிக்கப்பட்ட பரிசோதனைச் சபையின் அறிக்கை 2019 செப்தெம்பர் வரை சமர்ப்பிக்கப் பட்டிருக்காததுடன் வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசீலனைகளை விரைவாக முடிவுறுத்த வேண்டியதுடன் அமைச்சுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2019 மே 06 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த ஒரு மோட்டார் வாகனம் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் 2019 நவம்பர் 29 ஆந் திகதி வரையும் பரிசீலனைகள் நடாத்தப்படவில்லை. | உரிய பரிசீலனைகளை விரைவாக நடாத்துதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | நீதி அமைச்சினால் பயன்படுத்தி வருகின்ற நுவரெலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள 75 பேச்சர்ஸ் காணியும் சட்ட வரைஞர் திணைக்களம் அமைந்துள்ள | சட்டரீதியான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பெறுமதிகளை மதிப்பீடு செய்து | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடத்தின் காணியும் ஆகிய இரண்டு காணிகளினதும் உரித்து உறுதிகள், உரிமை மாற்றல் விபரத்தின் பிரதி, ஒப்படைப்புச் சான்றிதழ் என்பன இல்லாமையின் காரணமாக பெறுமதியை மதிப்பீடு செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஊ) | 17 வாகனங்கள் வாகனப் பிரிவிலுள்ள வாகனப் பதிவேட்டில் குறிப்பிட்ட காப்புறுதிப் பெறுமதியை விட குறைந்த பெறுமதியானது 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சிகாஸ் வாகன சொத்துக்கள் அறிக்கையில் உள்ளடக்ப்பபட்டிருந்தன. | சரியான வாகனப் பெறுமதியை இனங்கண்டு உள்ளடக்குதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ரூபா 56,139,450 தொகையான தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதிகளிலிருந்து ஆண்டின் போது பதவழிக்கப்பட்டிருந்த ரூபா 51,330,000 தொகையினை ஏடுகளிலிருந்து பதிவழிப்பது தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய படிவத்தில் தகவல்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டுநிதி மீதிகளில் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட ரூபா 51,330,000 பணம் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் பதிவு செய்தல் தவறவிடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சர்வதேச மத்தியஸ்த நிலையம் ஒரு நிரந்தர இடத்தில் ஸ்தாபிக்கும் வரை 2013 ஆம் ஆண்டிலிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஒரு இடத்தில் செயற்பட்டு வந்திருந்ததுடன் 2019 சனவரியிலிரந்து யூன் வரை ரூபா 18.82 மில்லியன் வாடகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையம் 2016 திசெம்பர் மாதத்தின் போது பிணைகளால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனிக்குத் தேவையான மூலதனத்தை வழங்குவது சம்பந்தமாக ஒரு தீர்மானம் எடுக்கப்படாமை, ஒரு பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருக்காமை ஆகிய காரணங்களினால் அக்கம்பனி செயற்பாடற்றுக் காணப்பட்டது. இதற்கிணங்க 2013 ஆம் ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் கடந்திருந்தும் இந்த நிலையத்தை ஒரு நிரந்தர இடத்தில் தோற்றுவிப்பதற்கு முடியாதிருந்ததுடன் தோற்றுவிக்கப்பட்ட கம்பனியும் செயற்பாடற்றுக் காணப்பட்டதனால் 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 18.82 மில்லியன் வாடகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக இருந்தது. 2019 யூலை மாதத்திலிருந்து இந்த நிலையம் நீதி அமைச்சின் கீழுள்ள கடமைப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | இந்த நிருவாகச் சிக்கலை விரைவாக தீர்த்துக் கொள்வதற்கும் பணத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்தக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

## 3.5 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவுக்கும் மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்குமான பதில்கள் 2020 ஆகஸ்ட் 27 அந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 155 மற்றும் 452(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கண்ககாய்வு அதிகாரச்சட்டத்தின் 38(உ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதில்கள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் பதில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவாகத் தெரிவிக்கின்றேன். |

## 3.6 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) புத்தளம் சட்ட உதவி, மற்றும் சமூக சீர்திருத்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வெளி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு 2010 ஒக்தோபர் 21 ஆந் திகதி செலுத்தப்பட்ட வேலை ஆரம்பித்தல் முற்பணத்தில் ரூபா 254,691 தொகையும் செயலாற்றல் பிணையிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 339,595 தொகையுமாக ரூபா 594,286 மொத்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அப்பணத்தை அறவிடுவது சம்பந்தமாக 2017 யூன் 28 ஆந் திகதியிலிரந்து 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை 4 சந்தர்ப்பங்களின் போது சட்ட பிரிவிடம் ஆலோசனைகள் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் 2019 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரையும் தேவையான ஆலோசனைகள் கிடைத்திருக்கவில்லை. | அறவிட வேண்டியுள்ள பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இப்பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையுள்ளதா என்பதனைக் கருத்தில் கொண்டு அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சினால் வழக்குத் தீர்ப்பினை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்தல் 2004 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையும் அந்த மொழிபெயர்ப்பு பிரிவு செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அப்போது வரை 2004 ஆம் ஆண்டில் I ஆம் அலகிலிருந்து 2011 ஆம் ஆண்டில் I ஆம் அலகு வரை சட்ட அறிக்கையை சிங்கள மொழியில் மொழி பெயர்த்தல் மற்றும் பதிப்பிப்பதற்கு ரூபா 4,064,441 செலவு செய்யப்பட்டிருந்தும் அவற்றின் அச்சிடல் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை.<br>2004 ஆம் ஆண்டில் I ஆம் அலகின் 03 பகுதிகள் இரண்டாவது பிழை திருத்தம் செய்வதற்கான அரசாங்க பிரதியை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க அச்சகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2019 ஒப்தோபர் 29 ஆந் திகதி வரை மீளப் பொறுப்பேற்கப்பட்டிருக்க வில்லை. | தேவைப்பாட்டினை இனங்கண்டு உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட சட்ட அறிக்கையின் 483 பிரதகிள் அமைச்சில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டில் I ஆம் அலகு வரையான 66,171 பிரதிகள் எதுவித பயன்பாடுமின்றி அமைச்சில் வைக்கப்பட்டிருந்ததனால் அவற்றினை அச்சிடுவதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 1,281,582 தொகை விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | தேவைப்பாட்டின் பிரகாரம் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சர்வதேச மத்தியஸ்த நிலையத்திடமிருந்து 2019 ஆகஸ்ட் மாதத்தின் போது நீதி அமைச்சுக்கு கிடைத்த 06 வகையான உபகரணங்களின் 81 அலகுகள் 2019 நவம்பர் வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | தேவைப்படுகின்ற பிரிவுகளுக்கு வழங்கி பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | இணக்கப்பாட்டு தொடக்க சபைகளில் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகள் காலத்தில் பிரச்சினைக்குரியவர்கள் வருகை தராமையின் காரணமாக தீர்த்து வைக்கப்படாத பிணக்குகளின் எண்ணிக்கை 25 சதவீதத்திலிருந்து 39 சதவீதம் வரையான வீச்சில் அதிகரித்திருந்தது. | இணக்கப்பாட்டு தொடக்க சபைகள் தொடர்பாக பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தி ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கையில் இணக்கப்படுத்தல் தொடர்பாக செயற்படுகின்ற ஒரேயொரு நிறுவனமான இணக்க சபை ஆணைக்குழுவில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பதவிகளில் 35 ஆளணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியில் 2017 யூன் 12 ஆந் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எதிர்காலத்தில் காணிப் பிணக்குகளுக்கான இணக்கப்பாட்டு தொடக்க சபைகள், மற்றும் வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் குடும்ப பிரச்சினைகளுக்கான இணக்கப்பாட்டு தொடக்க சபைகளை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அவற்றின் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசியமான வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |